திருப்பத்தூர் மாவட்டம்

இரண்டாம் இடைப்பருவத் தேர்வு –2022 தமிழ் வகுப்பு – 12

மதிப்பெண் 50

விடைக்குறிப்பு 10x1=10

1. இ) ஜார்ஜ் மிலி
2. அ) 3 1 4 2
3. ஈ) உவமையணி
4. இ) சிதம்பர நினைவுகள்
5. அ) மாதவி
6. ஆ) கூற்று 1 சரி 2 தவறு
7. இ) தூதுவர்
8. ஈ) புறநானூறு
9. ஆ) தமிழ்நதி
10. இ) செறு - இறுமல்

**11.எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?** 3x2=6

சிரிப்பு, அழுகை, சிறுமை(இளிவரல்), வியப்பு, அச்சம், பெருமை, சினம், மகிழ்ச்சி என்று மெய்ப்பாடுகள் எட்டு வகைப்படும்.

**12. பகைவராலும் அழிக்க முடியாத அரண் எது?**

அறிவு நம்மை ஆபத்திலிருந்து காக்கும் கருவி ஆகும். பகைவராலும் உட்புகுந்து அழிக்க இயலாத அரணாக விளங்குவது அறிவாகும்.

**13. பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.**

ஏற்ற காலத்தை அறிந்து ஏற்ற இடத்தையும் தெரிந்து ஒரு செயலை மேற்கொண்டால் உலகத்தையே அடைய நினைத்தாலும் அது கைகூடும்.

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின்.

**14. அறிவுடை வேந்தனின்நெறி குறித்து, பிசிராந்தையார் கூறுவன யாவை?**

அறிவுடைய அரசன் வரி திரட்டும் முறை அறிந்து மக்களிடமிருந்து வரி திரட்டினால் நாடு, கோடிக்கணக்கில் செல்வத்தைப் பெற்றுச் செழிப்படையும் என்று பிசிராந்தையார் கூறுகிறார்.

**15. கடலுக்கான வேறுபெயர்கள் நான்கினை எழுதுக.**

உவா, ஆர்கலி, கடும்புனல், பௌவம், பரவை

**16. பாவிகம் என்றால் என்ன?** 3x2=6

- காப்பியத்தின் பண்பாகப் ‘பாவிகம்’ என்பதைத் தண்டியலங்காரம் குறிக்கின்றது.
- காப்பியத்தில் கவிஞன் வலியுறுத்த விரும்பும் அடிப்படைக் கருத்தினையே பாவிகம் என்பர்.

**17. களம் - கலம்**

- ஆடுகளம் இருந்த இடத்தில் காப்பர் உலைகலம் கட்டுகிறார்கள்

. **புல் - புள்**

- புல்வெளியில் புள்ளினங்கள் அழகாய் விளையாடின.

**18. இணையான தமிழ்ச்சொல் எழுதுக.**

1. ஒலிவிளைவு 2. ஒளிப்பதிவு 3. பற்று அட்டை 4. விரைவுக் காசாளர்

**19. பேச்சு வழக்கில் தொன்மம் வெளிப்படும் இரு தொடர்களை எழுதுக.**

Kindly send me your district Questions & Keys to email id - padasalai.net@gmail.com

இந்தா போறான் சகுனி.
இவன் பெரிய அரிச்சந்திரன்.

20. அறிந்து- அறி +த்(ந்) + த் +உ

அறி- பகுதி
த்(ந்)- த்-சந்தி ந்-ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
உ- வினையெச்ச விகுதி

3x4=12

21. **நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.**

- சிற்ப நூலாசிரியர்களால் நன்னிலத்தை ஆடல் அரங்கத்திற்காக தேர்ந்தெடுத்தார்கள்.
- மலைகளில் நீண்டு வளர்ந்த ஒருசாண் அளவு கணுக்கள் கொண்ட மூங்கிலைக்கொண்டு வந்தனர்.
- மூங்கிலால் முறையான அரங்கம் அமைத்தனர்.
- தம் கைபெருவிரலால் 24 அளவினைக் கொண்டதாக மூங்கிலை வெட்டினர்.
- அதுவே அரங்கம் அமைக்கும் அளவுகோலாகும்.
- ஏழுகோல் அகலமும், எட்டுக்கோல் நீளமும் ஒருகோல் உயரமும் உடையதாக நாட்டிய அரங்கத்தை அமைத்தனர்.
- தூணின் நிழலானது அரங்கில் விழாதபடி அழகான நிலை விளக்குகளை நிறுத்தினர்.
- ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி என மூன்றுவகை திரை சீலைகளை அமைத்திருந்தனர்.
- ஓவிய வேலைப்பாடு மிக்க மேல் விதானத்தையும் அமைத்தனர்.
- சிறந்த முத்துகளால் இயன்ற மாலைகளை அரங்கம் முழுவதும் தொங்கவிடப்பட்டனர்.
- இவ்வாறு சிலப்பதிகாரத்தில் நாட்டிய அரங்கின் அமைப்பு புதுமையும், பொலிவும் பெற்று திகழ்ந்ததாக இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்.

**22. ஏதேனும் இரண்டு காட்சித் துணிப்புகளை விளக்குக.**

1. வீட்டிற்குள் சென்று அம்மாவின் முகத்தைப் பார்க்கிறோம். அம்மாவின் முகம் மட்டுமே நமக்குள் பதிவாகிறது. இது அண்மைக் காட்சித் துணிப்பு.
2. பேருந்தைப் பிடிக்க, சாலையைக் கடக்கும்போது சாலைகளின் இரு பக்கங்களிலும் பார்க்கிறோம். அப்போது நம் கண்கள் இன்னும் கொஞ்சம் சுருங்கி, பொருள்கள் அசைவதைத் தொலைவிலிருந்து பார்த்துப் பதிவுசெய்கின்றன. இதனைச் சேய்மைக் காட்சித் துணிப்பு.

23. **அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக, தமிழ்நதி கூறுகிறார்?**

☐ பொட்டல் வெளியில் போர் ஓய்ந்து பிறந்த ஒரு குழந்தை போல அதிசய மலரொன்று இதழ்விரித்து சிரிக்கின்றது.
☐ இம்மலர்ச்செடியானது, யானையின் எச்சத்தில் மிச்சமாய் தோன்றி இருக்கலாம், யாருடைய காலணி அடிப்பகுதியில் ஒட்க்கொண்ட விதை விழுந்து உயிர்ப்பு பெற்றிருக்கலாம்,
☐ எப்படியோ தப்பி பிழைத்து முளைத்த பாலைவனத்தில் பூத்த அதிசய மலரை எப்படியோ அடையாளம் கண்டு பறந்து வந்த வண்ணத்துப்பூச்சி போல் பறவைகளும் இம்மலரை நாடி வருதல் கூடும்.
☐ இச்செடியிலிருந்து காடு பெருகலாம், மழை உருவாகலாம், பாலைவனம் சோலை வனமாகலாம்.
☐ நம்பிக்கை என்னும் ஒன்றை பற்றிக் கொண்டு பூத்திருக்கிறது இந்த அதிசய மலர்.

24. இலக்கிய நயம் பாராட்டுக ( நான்கு நயங்கள் பொருத்தமாக எழுதியிருப்பின் முழுமதிப்பெண் வழங்கலாம்)

2x6=12

25. அ) **எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன - நிறுவுக.**

- முகமது இராவுத்தர் பாடிய “தேயிலைத் தோட்டப்பாட்டில” எளிய மக்களின் வலிகளை காட்சிப்படுத்திக்காட்டுகிறார்.
- ஆதிகாலத்தில் நம் இந்திய தேசத்தில் கைத்தொழில்கள் பல மக்கள் வாழ்க்கைக்கு பயனுள்ள வகையில் திகழ்ந்தன. கைத்தொழில்களே மக்களின் அடிப்படை ஆதாரமாகவும் விளங்கின.
- நாகரீக வளர்ச்சியிலும், நாடு ஆளும் திறனிலும் செல்வ செழிப்புடன் திகழ்ந்தது இத்திருநாடு.
- சீரும் சிறப்பும் மிகக் நாட்டை அன்னியன் புகுந்து அத்தனையும் அழித்துவிட்டான்.
- தன் சொந்த இடத்தில் உயிர் பெற்று வாழ பேயினும், நாயினும் கீழாய் நம்மை பாடாய் படுத்தி, கங்காணிகள் கூலி வேலைக்கு அழைப்பார்கள்.
- கொஞ்சம் கடன் பெற்ற பணத்தை பெரும் தொகை பெற்றதாக கணக்கை மாற்றி எழுதி, வாழ்நாள் முழுக்க அடிமை வாழ்க்கை வாழ நம்மை தள்ளி விடுவர்.
- அக்கறை தேசம், அந்தமான் தீவு என பாராமல், ஈவு இரக்கமில்லாமல் நம்மை வெள்ளைக்காரன் தேயிலை தோட்டத்திலே சேர்த்துவிடுவர்.
- உணவுக்காக, தான் உழைத்த கூலி போதவில்லை என அரைவயிற்றில் அடிப்பார்கள்.
- இப்படி துன்பப்படுவதைவிட, நாம் ஒற்றுமையாய் இருந்து, கல்வி, ஒழுக்கம், பண்பாட்டில் சிறந்து, நம்மண்ணில் இன்பமாய் வாழ வழிவகுப்போமே! என நாட்டுப்புற பாடலாகிய தேயிலைத் தோட்டப்பாட்டு எளிய மக்களின் வலியை எடுத்து இயம்புகிறது.

25. ஆ) **திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் - நிறுவுக.**

**முன்னுரை:**

ஒரு வாழ்வியல் நூல், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மனிதனுக்காக மட்டுமல்ல, இருபத்தோராம் நூற்றாண்டின் புதிய தலைமுறையினர்க்கும் வழிகாட்டும் புரட்சி நூல். வள்ளுவத்தின் பொருண்மை காலந்தோறும் புதிய புதிய கருத்தாக்கங்களைத் தந்து, இனம், மொழி, நாடு என்னும் எல்லைகளைக் கடந்து மனித வாழ்க்கையை வளப்படுத்துகிறது.

**வாழ்வியல் பதிவு:**

வள்ளுவம் தான் தோன்றிய காலத்தோடு நின்று விடாமல் இந்த நூற்றாண்டு மனிதனுக்கும் வாழச்சொல்லிக் கொடுக்கிறது. வாழ்க்கையைச் சொல்லிக் கொடுக்கிறது. சாராசரி மனிதன் அன்றாட வாழ்க்கையில் ஒழுக வேண்டிய நெறிமுறைகளின் தொகுப்பாகத் திருக்குறள் படைக்கப்பட்டுள்ளது.

**நம்முடைய பாடப்பகுதியில்**

உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைந் தற்று

என்று வந்துள்ள குறள் வாழ்க்கையின் எதார்த்த உண்மையை நமக்கு உணர்த்துகிறதல்லவா?

**அன்றும் இன்றும்:**

மது உயிருக்கு கேடு என்று விளம்பரம் படுத்திக்கொண்டிருக்கிறார்கள் ஆனால் அன்றே வள்ளுவர்,

களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று

எனும் குறட்பாவில், கள்ளுண்டு மயங்கியவனிடம் நல்லன சொல்லித் திருத்த முயல்வது, நீரில் மூழ்கிய ஒருவரைத் தீப்பந்தம் கொண்டு தேடுவது போன்றதாகும் என்று சுட்டுகிறார்.

**தனி தனி நபர்களும் தனக்குரியதாக்கிக் கொள்ளுதல் :**

சோர்வில்லாதவன் அடக்கத்துடன் உழைப்பவன் விதியைக் கூட மாற்றி அமைக்கும் வலிமையைப் பெறுவான் என்றும், உயிர்களைக் கொல்லாமலும், மாமிசம் சாப்பிடாமலும் இருப்பவரைக் கண்டால், எல்லா உயிர்களும் கை கூப்பி வணங்கும் என்றும், தெய்வத்தை வழிபட்டு கூட, ஒரு செயல் நடக்காமல் போகலாம். ஆனால் முயற்சிக்கு தகுந்த பலன் ஒருநாள் கிடைத்தே தீரும் இன்னும் எத்தனையோ இது போன்ற கருத்துகள் வாழ்வில் தனக்கு தனக்கு என கடைப்பிடிக்கும் வகையில் வள்ளுவர் எழுதியுள்ளார்.

**முடிவுரை :**

Kindly send me your district Questions & Keys to email id - padasalai.net@gmail.com

நாளும் வள்ளும் காட்டும் வழியை பின்பற்றி நடந்தால், மனித நிலை கடந்து, இறை நிலையை அடைவோம்.

26. அ) **நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

☐ உயர் பதவிகளில் இருப்பவர்கள் எல்லாவற்றிலும் நிபுணத்துவம் பெற்றவர்களாக இருப்பது சாத்தியமில்லை.

☐ ஆனால் யார் திறமைசாலிகள் என்று அறிந்து அவர்களை அருகில் வைத்துக்கொண்டால் போதும்.

☐ தெரிந்திருப்பது ஒருவகை அறிவு என்றால், யாருக்குத் தெரியும் எனத் தெரிந்திருப்பது மற்றோர் அறிவு.

☐ நாலடியார் அதையே பக்குவமாகச் சொல்கிறது.

☐ **“கல்லாரே ஆயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்**
**நல்லறிவு நாளுந் தலைப்படுவர் - தொல்சிறப்பின”**

☐ நிருவாகத்தில் வரவே செலவைத் தீர்மானிக்க வேண்டும். வரவைத் தாண்டி நிறையச் செலவு செய்தல் கூடாது என்பதை நன்கு அறிந்தவர்கள் நிர்வாக மேலாண்மை உடையவர்கள் ஆவார்கள்.

☐ ஷேக்ஸ்பியரின் நாடகத்தில் வரும் ‘டைமன்’ கதையில் உதவியாளர்கள் நிதி நிலமை பற்றி பேச வரும்பொழுதெல்லாம் செவி சாய்க்காமல் இருந்ததன் விளைவு, நாட்டையே இழந்து, மனிதர்களை வெறுத்து ஒதுக்கு புறமாக வாழும் நிலை ஏற்பட்டது.

☐ அது போலதான் நிருவாக மேலாண்மை உடையவர்களுக்கு,

“இதனை இவன் முடிக்கும் என்று ஆய்ந்து
அதனை அவன்கண் விடல் “
என்ற குறள் கூறும் வழியில் வாழ வேண்டும்.

☐ அதே சமயத்தில் பார்க்காத பயிரும் கேட்காத கடனும் பாழ் என்ற பழமொழியையும் உணர்ந்து, ஒதுக்கப்பட்ட பணியைச் செய்பவரைக் கண்காணித்தல் வேண்டும்.

☐ இவ்வாறு நிருவாக மேலாண்மை குறித்து இறையன்பு அவர்கள் கூறுகின்றார்.

26 ஆ) **சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது - விளக்குக.**

☐ கரூரை அடுத்த புகளூரில் ஆறுநாட்டான் குன்றின் மீது பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு, சங்ககால மக்களின் வரலாற்றை அறிய இயலுகிறது.

**கல்வெட்டு செய்திகளாவன.**

☐ கோ ஆதன் செல்லிரும் பொறை மகன் என்ற தொடர் பிராமி எழுத்துகளால் எழுதப்பட்டிருந்தன. மேலும், பெருங்கடுங்கோ, இளங்கடுங்கோ, இளங்கோ என்ற பெயர்களும் பொறிக்கப்பட்டிருந்தன.

**கல்வெட்டில் உள்ள முழு வரிகள்**

“ அம்மண்ணன் யாற்றூர் செங்காயபன் உறைய
கோ ஆதன் செல்லிரும் பொறை மகன்
பெருங் கடுங்கோன் மகன் (இ)ளங்கோ
கடுங்கோ(இ)ளங்கோ ஆக அறுத்த கல்” என்பதே ஆகும்.

☐ இது கருவூரில் இருந்து ஆட்சி செய்த் சேரல் இரும்பொறை மன்னர்கள் பொறித்தது. பதிற்றுப்பத்திலும் ஏனைய சில சங்க நூல்களிலும் பாடப்பெற்ற பழந்தமிழ் மன்னர்கள் இவர்கள்.

☐ இக்கல்வெட்டு ஏறத்தாழ இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பதை நாம் ஐராவதம் மகாதேவன் அவர்கள் தம் கல்வெட்டு ஆராய்ச்சி மூலம் நமக்கு கூறி இருக்கிறார்.

1x4=4

27. காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே

மாநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்

நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,

வாய்ப்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்.

Kindly send me your district Questions & Keys to email id - padasalai.net@gmail.com